# காலாண்டுத் தேர்வு (Quarterly Examination ) – 2024

## அறிவியல் (Science)

C

**Class : 8** **Marks : 100**

| | | |
|---|---|---|
| **I.** | **சரியான விடை.** 10 x 1 = 10 | **Choose the correct answer.** 10 x 1 = 10 |
| 1. | இ) கெல்வின் | (c) kelvin |
| 2. | ஈ) மேற்கண்ட அனைத்தும் | (d) All the above |
| 3. | ஆ) குழி ஆடி | (b) concave mirror |
| 4. | அ) திடப்பொருள் | (a) Solid |
| 5. | ஈ) கார்பன் | (d) carbon |
| 6. | இ) இரும்பு | (c) iron |
| 7. | ஆ) நைட்ரஜன் | (b) nitrogen |
| 8. | ஆ) இன்புளுயன்ஸா | (b) influenza |
| 9. | ஆ) பூஞ்சைகள் | (b) fungi |
| 10. | இ) சுவாசம் | (c) breathing |
| **II.** | **கோடிட்ட இடங்களை நிரப்புக.** 5 x 1 = 5 | **Fill in the blanks.** 5 x 1 = 5 |
| 11. | ஸ்டிரேடியன் | steradian |
| 12. | பொருள் ஒன்றினால் ஏற்கப்பட்ட அல்லது இழக்கப்பட்ட வெப்பத்தினை | the amount of heat gained or lost by a substance |
| 13. | ஹைட்ரஜன், ஆக்சிஜன் | hydrogen , oxygen |
| 14. | அம்மோனியா | ammonia |
| 15. | ஜெலீடியம் அல்லது கிரேசிலேரியா | Gelidium or Gracillaria |
| **III** | **சரியா அல்லது தவறா எனக் குறிப்பிட்டு, தவறு எனில் சரியான கூற்றை எழுதுக.** (5 x 1 = 5) | **Say true or false. If false, correct the statement.** 5 x 1 = 5 |
| 16. | சரி | True |
| 17. | தவறு அணுக்கடிகாரங்கள், GPS கருவிகளில் பயன்படுத்தப்படுகின்றன. | False, Atomic clocks are used in GPS devices |
| 18. | தவறு, பாதரசத்தின் குறியீடு Hg ஆகும். | False, Symbol of mercury is Hg. |
| 19. | தவறு, சிட்ரஸ் கேன்கர் என்ற நோய் நீர் மற்றும் காற்றினால் பரவுகிறது. | False, Citrus canker is transmitted by air and water. |
| 20. | சரி | True |
| **IV.** | **பொருத்துக.** ( 10 x 1 = 10) | **Match the following.** 10 x 1 = 10 |
| 21. | திண்மக்கோணம் – இ) ஸ்ட்ரேடியன் | Solid angle - c) Steradian |
| 22. | தளக்கோணம் – அ) ரேடியன் | Plane angle - a) Radian |
| 23. | டங்ஸ்டன் – ஈ) மின்விளக்கு இழை | Tungsten - d) Making the filament of a bulb |
| 24. | போரான் – உ) ராக்கெட் எரிபொருள் பற்றவைப்பான் | Boron - e) As a fuel for ignition in rocket |
| 25. | நைட்ரஜன் – ஆ) உரம் | Nitrogen - b) Fertilizer |
| B. 26. | விப்ரியோ காலரே – இ) ஒற்றை கசையிழை | Vibrio cholerae - c) Monotrichous |
| 27. | புரோபயாட்டிக்ஸ் – உ) லாக்டோ பேசில்லஸ் அசிடோபிலஸ் | Probiotics - e) Lactobacillus Acidophilus |
| 28. | பாசிகள் – ஈ) தற்சார்பு ஊட்ட உயிரி | Algae - d) Autotrophs |
| 29. | பூஞ்சைகள் – ஆ) பிற சார்பு ஊட்ட உயிரி | Fungus - b) Heterotrophs |
| 30. | பேயோஃபைசி – அ) லேமினேரியா | Phaeophyceae - a) Laminaria |
| **V.** | **விடையளி.** 15 x 2 = 30 | **Answer very briefly. (Any 15)** 15 x 2 = 30 |
| 31. | மதிப்புத் தெரிந்த ஒரு திட்ட அளவினைக் கொண்டு, தெரியாத அளவின் மதிப்பைக் கணக்கிடும் செயல்பாடே அளவீடு ஆகும். | Measurement is the process of finding an unknown physical quantity by using a standard quantity. |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 32. | அழுத்தம் $P = \frac{F}{A}$<br>$= \frac{\overset{20}{\cancel{500}}}{\underset{1}{\cancel{25}} \times 10^{-4}}$<br>Solution:<br>அழுத்தம் $P = 20 \times 10^4 N/m^2$ (or) $20 \times 10^4$ Pa | Pressure $P = \frac{F}{A}$<br>$= \frac{\overset{20}{\cancel{500}}}{\underset{1}{\cancel{25}} \times 10^{-4}}$<br>Solution:<br>Pressure $P = 20 \times 10^4 N/m^2$ (or) $20 \times 10^4$ Pa |
| 33. | கார்பன், ஹைட்ரஜன் மற்றும் ஆக்சிஜன் | Carbon, Hydrogen and Oxygen |
| 34. | மோல் என்பது $6.023 \times 10^{23}$ துகள்களைக் கொண்ட பொருளின் அளவைக் குறிக்கிறது. இது 'mol' என்ற குறியீட்டால் குறிக்கப்படுகிறது. | Mole is defined as the amount of substance, which contains $6.023 \times 10^{23}$ entities. It is denoted as 'mol'. |
| 35. | 1. குவி ஆடிகள் வாகனங்களில் பின்காட்சி ஆடிகளாகப் பயன்படுகின்றன. இவைவெளிப்புறம் வளைந்திருப்பதால் நேரான பிம்பம் மற்றும் அகன்ற பார்வைப் புலத்தைத் தருகின்றன.<br>2. மருத்துவமனைகள், தங்கும் விடுதிகள், பள்ளிகள் மற்றும் அங்காடிகளில் இவை பயன்படுகின்றன. பெரும்பாலும் குறுகிய வளைவுகள் கொண்ட கட்டடத்தின் சுவர்கள் அல்லது கூரைகளில் இந்த ஆடிகள் பொருத்தப்பட்டிருக்கும்.<br>3. சாலைகளின் மிகவும் குறுகிய மற்றும் நுட்பமான வளைவுகளில் குவி ஆடிகள் பயன்படுகின்றன. ( **ஏதேனும் இரண்டு**) | 1. Convex mirrors are used in vehicles as rear view mirrors because they give an upright image and provide a wider field of view as they are curved outwards.<br>2. They are found in the hallways of various buildings including hospitals, hotels, schools and stores. They are usually mounted on a wall or ceiling where hallways make sharp turns.<br>3. They are also used on roads where there are sharp curves and turns.<br>**( Any two)** |
| 36. | ஆடி மையத்திற்கும், முதன்மைக் குவியத்திற்கும் இடைப்பட்ட தொலைவு குவிய தொலைவு (f) எனப்படும். கோளக ஆடியின் குவிய தொலைவிற்கும். வளைவு ஆரத்திற்கும் இடையே ஒரு தொடர்பு உள்ளது. குவிய தொலைவானது வளைவு ஆரத்தில் பாதியாக இருக்கும்.<br>குவியதொலைவு = வளைவு ஆரம் / 2 | The distance between the pole and the principal focus is called focal length (f) of a spherical mirror. There is a relation between the focal length of a spherical mirror and its radius of curvature. The focal length is half of the radius of curvature.<br>Focal length = Radius of curvature / 2 |
| 37. | வெப்பக் கடத்தல், வெப்பச் சலனம், வெப்பக் கதிர்வீச்சு | Conduction, Convection, Radiation |
| 38. | விரிவடைதல், வெப்பநிலை உயர்வு, நிலை மாற்றம் | Expansion, Increase in temperature, Change in state |
| 39. | அ) Al – அலுமினியம், ஆ) Co – கோபால்ட்<br>இ) Ba – பேரியம், ஈ) Br – புரோமின் | (a) Al – Aluminium, (b) Co - Cobalt<br>(c) Ba – Barium, (d) Br - Bromine |
| 40. | ஒரு வேதி வினை என்பது நிரந்தரமான, மீளாத்தன்மையுடைய மற்றும் புதியபொருளை உருவாக்கக்கூடிய ஒரு மாற்றமாகும். | A chemical reaction is a permanent and irreversible change which produces a new substance. |
| 41. | கால்சியம் ஆக்சைடு மற்றும் கார்பன் டைஆக்சைடு | Calcium oxide and Carbon dioxide. |
| 42. | திட கார்பன் டைஆக்சைடு உலர் பனிக்கட்டி எனப்படுகிறது. இது குளிர்விப்பானாகப் பயன்படுகிறது. | Solid carbon dioxide, called as dry ice is used as a coolant. |
| 43. | பிளாஸ்மோடியம் (புரோட்டோசோவா), | Plasmodium (Protozoa), |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | குமட்டல், வாந்தி, கடும் காய்ச்சல் | Nausea, vomiting, high fever. |
| 44. | சிலியேட்டா, பிளாஜெல்லேட்டா, சூடோபோடியா, ஸ்போரோசோவா **(ஏதேனும் இரண்டு)** | Ciliates, Flagellates, Pseudopods, Sporozoans **(Any two)** |
| 45. | பாசிகள், பச்சையம் கொண்ட எளிமையான ஆரம்ப நிலைத் தற்சார்பு ஊட்டத் தாவரங்கள் ஆகும். இது தாலோஃபைட்டா பிரிவைச்சார்ந்தது. இதன் உடலமானது தாலஸ் என அழைக்கப்படுகிறது. அதாவது, தாவர உடலமானது வேர், தண்டு, இலை என்ற வேறுபாடற்றது. | Algae are chlorophyll bearing, simple and primitive plants. These plants are autotrophs. Algae belongs to thallophyta and the plant body of algae is called thallus. |
| 46. | நுண்ணுயிர்க் கொல்லி, உணவு, வைட்டமின்கள், மதுபானம் **(ஏதேனும் இரண்டு)** | Antibiotic, Food, Vitamins, Alcohol **(Any two)** |
| 47. | உட்சுவாசம், வெளிச்சுவாசம் | Inspiration (Inhalation), Expiration (Exhalation) |
| 48. | ஆக்சிஜன், ஆற்றல் | Oxygen , Energy |
| 49. | உயிரினங்கள் தொடர்ந்து வாழ்வதற்குத் தேவையான அனைத்து வேதிவினைகளின் தொகுப்பே வளர்சிதை மாற்றம் எனப்படும். வளர்சிதை மாற்றம், வளர் மாற்றம் (பொருள்களை உருவாக்குதல்) மற்றும் சிதை மாற்றம் (பொருள்களை உடைத்தல்) ஆகியவற்றை உள்ளடக்கியது. | Metabolism is the sum of chemical reactions by which living organisms sustain their life. Metabolism consists of anabolism (the build up of substances) and catabolism (the breakdown of substances). |
| **VI** | **சுருக்கமாக விடையளிக்கவும். (5 x 4 = 20)** | **Answer briefly (Any five). 5 x 4 = 20** |
| 50. | மூடிய அமைப்பில் ஓய்வுநிலையில் உள்ள திரவத்தின் எந்தவொரு புள்ளியிலும் அளிக்கப்படும் அழுத்தமானது அத்திரவத்தின் அனைத்துப் புள்ளிகளுக்கும் சமமாக பகிர்ந்தளிக்கப்படும் என்பது பாஸ்கல் விதி.<br>• வாகனங்களுக்கு பழுது பார்க்கும் பணிமனைகளில் வாகனங்களை உயர்த்த பாஸ்கல் விதியின் அடிப்படையில் இயங்கும் நீரியல் உயர்த்திகள் பயன்படுத்தப்படுகின்றன.<br>• வாகனங்களில் உள்ள வேகத்தடை (Speed Break) அமைப்பு பாஸ்கல் விதியின் அடிப்படையில் செயல்படுகிறது.<br>• பஞ்சு அல்லது ஆடைகள் மிகக் குறைவான இடத்தை அடைத்துக் கொள்ளும் வகையில் அவற்றை அழுத்தப்பட்ட பொதிகளாக மாற்றுவதற்கு நீரியல் அழுத்தி பயன்படுத்தப்படுகிறது. **(ஏதேனும் இரண்டு)** | Pascal's law states that the pressure applied at any point of a liquid at rest, in a closed system, will be distributed equally through all directions of the liquid.<br>• In automobile service stations, the vehicles are lifted upward using the hydraulic lift which works as per Pascal's law.<br>• Automobile brake system works according to Pascal's law.<br>• The hydraulic press is used to compress the bundles of cotton or cloth so as to occupy less space.<br>**(Any two)** |
| 51. | அ) ஓர் ஒளிக்கதிரானது பளபளப்பான, மென்மையான ஒளிரும் பரப்பின்மீது படும்போது, அது திருப்பி அனுப்பப்படுகிறது. இவ்வாறு ஒளியானது பளபளப்பான, மென்மையான, ஒளிரும் பரப்பில் பட்டு திரும்பும் நிகழ்வே ஒளி எதிரொளித்தல் என்று அழைக்கப்படுகிறது.<br><br>ஆ) • கதிர் மற்றும் படுபுள்ளியில் வரையப்பட்ட குத்துக்கோடு ஆகிய அனைத்தும் ஒரே தளத்தில் அமைந்துள்ளன.<br>• படுகோணமும் (i), எதிரொளிப்புக் கோணமும் (r) எப்போதும் சமமாகவே இருக்கும். | a) A ray of light, falling on a body having a shiny, polished and smooth surface alone is bounced back. This bouncing back of the light rays as they fall on the smooth, shiny and polished surface is called reflection.<br><br>b) • The incident ray, the reflected ray and the normal at the point of incidence, all lie in the same plane.<br>• The angle of incidence (i) and the angle of reflection (r) are always equal. |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| |  |  |
| 52. | தன் வெப்ப ஏற்புத்திறன், $C = Q / m \times \Delta T$<br>இங்கு, $Q = 84000$ J<br>$m = 2$ kg<br>$\Delta T = 70°C - 60°C = 10°C$ அல்லது 10 K<br>$C = 84000 / 2 \times 10 = 4200$ J $kg^{-1} K^{-1}$<br>நீரின் தன் வெப்ப ஏற்புத்திறன் 4200 J $kg^{-1} K^{-1}$ ஆகும். | Specific heat capacity, $C = Q / m \times \Delta T$<br>Here, $Q = 84000$ J<br>$m = 2$ kg<br>$\Delta T = 70°C - 60°C = 10°C$ or 10 K<br>$C = 84000 / 2 \times 10 = 4200$ J $kg^{-1} K^{-1}$<br>The Specific heat capacity of water is 4200 J $kg^{-1} K^{-1}$. |
| 53. | **சேர்மம் / ஆக்கக் கூறுகளாக உள்ள தனிமங்கள்**<br>நீர் – ஹைட்ரஜன், ஆக்சிஜன்<br>ஹைட்ரோ குளோரிக் அமிலம் – ஹைட்ரஜன், குளோரின்<br>நைட்ரிக் அமிலம் – ஹைட்ரஜன், நைட்ரஜன், ஆக்சிஜன்<br>கந்தக அமிலம் – ஹைட்ரஜன், கந்தகம், ஆக்சிஜன்<br>அசிட்டிக் அமிலம் (வினிகர்) – கார்பன், ஹைட்ரஜன், ஆக்சிஜன் | **Compounds / Consititutent Elements**<br>Water – Hydrogen, Oxygen<br>Hydrochloric acid – Hydrogen, Chlorine<br>Nitric acid – Hydrogen, Nitrogen, Oxygen<br>Sulphuric acid – Hydrogen, Sulphur, Oxygen<br>Acetic acid (Vinegar) – Carbon, Hydrogen, Oxygen |
| 54. | சுற்றுச்சூழலின் இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் பண்புகளில் விரும்பத்தகாத மாற்றங்கள் ஏற்பட்டுவதே மாசுபடுதல் எனப்படும்.<br>**வகைகள்:**<br>காற்று மாசுபாடு<br>நீர் மாசுபாடு<br>நில மாசுபாடு | An unwanted change in the physical, chemical and biological properties of the environment is called pollution.<br>Types:<br>Air pollution<br>Water pollution<br>Land pollution |
| 55. | அ) எதிர் உயிர்க்கொல்லி என்பவை பிற உயிரினங்களுக்கு நச்சாக உள்ள உயிரினங்களால் உருவாக்கப்படும் பொருள்களாகும்.<br>ஆ) 1. பெனிசிலின்<br>2. ஸ்ட்ரெப்டோமைசின் | a)Antibiotic is a substance produced by living organisms which is toxic for other organisms.<br>b)1. Penicillin<br>2. Streptomycin |
| 56. | **ஃபில்லாந்தஸ் அமாரஸ் (கீழா நெல்லி):**<br>• இதன் தாவர உடலம் முழுவதும் மஞ்சள் காமாலை நோய்க்கு மருந்தாகப் பயன்படுகிறது.<br>• இது கல்லீரலுக்கு வலிமையைக் கொடுத்து, கல்லீரல் நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுகிறது.<br>**அலோ வெரா (சோற்றுக் கற்றாழை):**<br>• இதன் இலைகள் மூலநோய் மற்றும் தோல் பகுதியில் தோன்றும் அழற்சியைக் குணப்படுத்துகின்றன. • இது வயிற்றுப் புண்ணுக்குரிய மருந்தாகும். | **Phyllanthus amarus (Keezhanelli)** :<br>• The entire plant is used for the treatment of jaundice.<br>• It gives additional strength to human liver and it is used to treat other liver disorders.<br>**Aloe vera (Sothu Katrazhai):**<br>• Leaves of this plant is used to cure piles and inflammations on the skin.<br>• It cures peptic ulcer. |
| **VII.** | **விரிவாக விடையளிக்கவும். (4 x 5 = 20)** | **Answer in detail. (4 x 5 = 20)** |

57. அ)

| Position of the Object | Position of the Image | Image Size | Nature of the Image |
|---|---|---|---|
| At infinity | At F | Highly diminished | Real and inverted |
| Beyond C | Between C and F | Diminished | Real and inverted |
| At C | At C | Same size as the object | Real and inverted |
| Between C and F | Beyond C | Magnified | Real and inverted |
| At F | At infinity | Highly magnified | Real and inverted |
| Between F and P | Behind the mirror | Magnified | Virtual and erect |

| பொருளின் நிலை | பிம்பத்தின் நிலை | பிம்பத்தின் அளவு | பிம்பத்தின் தன்மை |
|---|---|---|---|
| ஈறிலாத் தொலைவில் | F இல் | மிகச் சிறியது | தலைகீழான மெய் பிம்பம் |
| C க்கு அப்பால் | C க்கும் F க்கும் இடையில் | சிறியது | தலைகீழான மெய் பிம்பம் |
| C இல் | C இல் | பொருளின் அளவு இருக்கும் | தலைகீழான மெய் பிம்பம் |
| C க்கும் F க்கும் இடையில் | C க்கு அப்பால் | பெரியது | தலைகீழான மெய் பிம்பம் |
| F இல் | ஈறிலாத் தொலைவில் | மிகப்பெரியது | தலைகீழான மெய் பிம்பம் |
| F க்கும் P க்கும் இடையில் | ஆடிக்குப் பின்னால் | பெரியது | நேரான மாய பிம்பம் |

57. ஆ)

| அளவு | அலகு | குறியீடு |
|---|---|---|
| நீளம் | மீட்டர் | m |
| நிறை | கிலோகிராம் | kg |
| காலம் | வினாடி | s |
| வெப்பநிலை | கெல்வின் | K |
| மின்னோட்டம் | ஆம்பியர் | A |
| பொருளின் அளவு | மோல் | mol |
| ஒளிச்செறிவு | கேண்டிலா | cd |

| Quantity | Unit | Symbol |
|---|---|---|
| Length | metre | m |
| Mass | kilogram | kg |
| Time | second | s |
| Temperature | kelvin | K |
| Electric Current | ampere | A |
| Amount of Substance | mole | mol |
| Luminous Intensity | candela | cd |

58. அ)

| பண்பு | உலோகம் | அலோகம் |
|---|---|---|
| அறை வெப்ப நிலையில் இயற்பியல் நிலை | பொதுவாக திண்மம் (சில நேரங்களில் திரவம்) | திண்மம், திரவம், வாயு |
| தகடாக மாறும் தன்மை | அடிக்கும்போது தகடாக மாறும் | பொதுவாக மென்மையானது அல்லது உடையக் கூடியது |
| கம்பியாக நீளும் தன்மை | இழுக்கப்படும்போது கம்பியாக நீளும் | பொதுவாக மென்மையானது அல்லது உடையக் கூடியது |
| திண்ம நிலையில் தோற்றம் | பளபளப்பு உடையவை | பளப்பளப்பற்றவை |
| உருகுநிலை | பொதுவாக அதிகம் | பொதுவாக குறைவு |
| கொதிநிலை | பொதுவாக அதிகம் | பொதுவாக குறைவு |
| அடர்த்தி | பொதுவாக அதிகம் | பொதுவாகக் குறைவு |
| வெப்பம் மற்றும் மின்சாரம் கடத்தும் திறன் | நற்கடத்திகள் | அரிதிற்கடத்திகள் |

| Property | Metal | Non Metal |
|---|---|---|
| Physical state at room temperature | Usually solid (Occasionaly liquid) | Solid, liquid or gas |
| Malleablity | Good | Poor (Usually soft or brittle) |
| Ductility | Good | Poor (Usually soft or brittle) |
| Melting point | Usually high | Usually low |
| Boiling point | Usually high | Usually low |
| Density | Usually high | Usually low |
| Conductivity (Thermal and Electrical) | Good | Very poor |

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

58.
ஆ)

| | | | |
|---|---|---|---|
| a | Baking soda | Sodium, Hydrogen, Carbon and Oxygen | Fire extinguisher, preparation of baking powder and preparation of cakes and bread. |
| b | Bleaching powder | Calcium, Oxygen and Chlorine | As bleaching agent, disinfectant and sterilisation of drinking water. |
| c | Quick lime | Calcium and Oxygen | Manufacture of cement and glass. |
| d | Sugar | Carbon, Hydrogen and Oxygen | Preparation of sweets, toffees and fruit juices. |

| | | | |
|---|---|---|---|
| அ | ரொட்டிச் சோடா | சோடியம், ஹைட்ரஜன், கார்பன் மற்றும் ஆக்சிஜன் | தீயணைக்கும் சாதங்களிலும், பேக்கிங் பவுடர் தயாரிப்பிலும், கேக், ரொட்டி தயாரிப்பிலும் பயன்படுகிறது. |
| ஆ | சலவைத் தூள் | கால்சியம், ஆக்சிஜன் மற்றும் குளோரின் | சலவைத் தொழிலில் வெளுப்பானாகவும், கிருமி நாசினியாகவும், குடிநீர் சுத்திகரிப்பிலும் பயன்படுகிறது. |
| இ | சுட்டச் சுண்ணாம்பு | கால்சியம் மற்றும் ஆக்சிஜன் | சிமெண்ட் மற்றும் கண்ணாடி தயாரிப்பில் பயன்படுகிறது. |
| ஈ | சர்க்கரை | கார்பன் , ஹைட்ரஜன் மற்றும் ஆக்சிஜன் | இனிப்புகள், மிட்டாய்கள், பழச்சாறுகள் தயாரிக்கப் பயன்படுகிறது. |

www.Padasalai.Net

59.
அ)

| Dicot Plants | Monocot Plants |
|---|---|
| Seed has two cotyledons. | Seed has only one cotyledon. |
| Plants have tap root system and leaves are with reticulate venation. | Plants have fibrous root system, and leaves are with parallel venation. |
| Flowers are tetramerous or pentamerous. Calyx and corolla are well differentiated. | Flowers are trimerous and not differentiated into calyx and corolla. |
| Pollination occurs mostly by insects. | Pollination occurs mostly by wind. |
| Examples are: Bean, Mango, Neem. | Examples are: Grass, Paddy, Banana. |

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| இரு வித்திலை தாவரங்கள் | ஒரு வித்திலை தாவரங்கள் |
|---|---|
| விதைகள், இரண்டு விதையிலைகளைக் கொண்டிருக்கின்றன. | விதை, ஒரு விதையிலையைக் கொண்டுள்ளது. |
| இவை ஆணிவேர்த் தொகுப்புடனும், வலைப்பின்னல் நரம்பமைவு கொண்ட இலைகளுடனும் காணப்படுகின்றன. | இத்தாவரங்கள், சல்லி வேர்த் தொகுப்புடனும், இணைப் போக்கு நரம்பமைவு கொண்ட இலைகளுடனும் காணப்படுகின்றன. |
| மலர்கள் நான்கு அல்லது ஐந்து அங்கங்களைக் கொண்டிருக்கும். அவை, இதழ்கள் மற்றும் புல்லி என இரண்டு அடுக்குகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. | மலர்கள் மூன்று அங்கங்களைக் கொண்டுள்ளன. அல்லி மற்றும் புல்லி இதழ்கள் பிரிக்கப்படாமல் ஒரே வட்டத்தில் அமைந்திருக்கும். |
| மகரந்தச் சேர்க்கை பெரும்பாலும் பூச்சிகள் மூலம் நடைபெறுகிறது. | மகரந்தச் சேர்க்கை பெரும்பாலும் காற்றின் மூலம் நடைபெறுகிறது. |
| எ.கா. அவரை, மாமரம், வேப்பமரம் | எ.கா. புல், நெல், வாழை |

59. ஆ)

| உட்சுவாசம் | வெளிச்சுவாசம் |
|---|---|
| உதரவிதானத் தசைகள் சுருங்குகின்றன | உதரவிதானத் தசைகள் மீட்சியடைகின்றன. |
| உதரவிதானம் கீழ்நோக்கி நகர்கிறது | உதரவிதானம் மேல்நோக்கி நகர்கிறது. |
| விலா எலும்புகள் மேல் நோக்கியும் வெளிப்புறமும் நகர்கின்றன. | விலா எலும்புகள் கீழ்நோக்கி நகர்கின்றன. |
| மார்பறையின் கொள்ளளவு அதிகரிக்கிறது | மார்பறையின் கொள்ளளவு குறைகிறது. |
| காற்று மூக்கின் வழியாக நுரையீரலுக்குள் நுழைகிறது. | காற்று மூக்கின் வழியாக நுரையீரலிலிருந்து வெளியேறுகிறது. |

| Inhalation | Exhalation |
|---|---|
| The muscles of the diaphragm contract. | The muscles of the diaphragm relax. |
| The diaphragm goes downward. | The diaphragm goes upward. |
| The ribs move upwards and outwards. | The ribs move downwards. |
| The volume of thoracic (chest) cavity increases. | The volume of thoracic (chest) cavity decreases. |
| Air enters the lungs through the nose. | Air goes out of the lungs through the nose. |

60. அ)






| | | |
|---|---|---|
| 60. ஆ) |  |  |

www.Padasalai.Net